# IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUPALAYAM

## DEPOSITION OF WITNESS

## M.C.O.P. 40/2022

## CNR.No.TNCB19000

Date: 12.06.2025 PW1

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | கௌசல்யா | வயது | 28 |
| **த/பெ** | வீரபத்திரன் | வட்டம் | திருப்பூர் |
| **விலாசம்** | ஆண்டிபாளைய ம் | மாவட்டம் | திருப்பூர் |
| | | **தொழில்** | |

The witness sweared under oaths Act 1969 on this the day of 12th June 2025

ம.சா.1 மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

**3-ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

வீரபத்திரன் இறந்ததற்காக மனு தாக்கல் செய்திருக்கிறேன். வீரபத்திரன் எனது கணவர். இறக்கும் போது 28 வயது. 1 மற்றும் 2 மனுதாரர்கள் இறந்து விட்டார்கள் என்றால் சரிதான். அவர்கள் எனது மாமனார் மற்றும் மாமியார் ஆவார்கள். எனது மாமனார் மாமியாருக்கு வேறு வாரிசுகள் உள்ளார்களா என்றால் இல்லை. எனது கணவருக்கு அக்கா இருக்கிறார். அவரது பெயர் பிரவீணா. அவரை 5-வது மனுதாரராக சேர்த்திருக்கிறேன். எனக்கு ஒரு குழந்தை உள்ளது. விபத்து 15.02.2020 ம் ஆண்டு அன்னூர் ரோடு குறுக்கிளியாம்பாளையத்தில் நடந்தது. எனது கணவர் இரு சக்கர வாகனத்தில் சென்றார்.

எனது கணவர் மட்டுமே சென்றார். எனது கணவர் யாருடன் வந்தார் என்று எனக்கு தெரியாது. எனது கணவர் அவரது மைத்துனருடன் இரு சக்கர வாகனத்தில் வரும்போது தான் விபத்து நடந்தது என்று சொன்னால் சரிதான். எனது கணவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் சென்றார். எனது கணவர் இரவில் சரியாக வாகனத்தை ஓட்டாமல் வந்து 1ம் எதிர்மனுதாரர் முறையாக ஓட்டி வந்த வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமமும் எனது கணவர் ஓட்டி வந்த வாகனத்திற்கு காப்பீட்டு

சான்று இல்லாமலும் வாகனம் ஓட்டும்போது தலைக்கவசம் அணியாமல் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல.

1ம் எதிர்மனுதாரருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லாததால் நான் 3ம் எதிர்மனுதாரரிடம் இழப்பீடு கேட்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. எனது கணவர் இறக்கும்போது கூலி வேலைக்கு சென்று கொண்டிருந்தார். கூலி வேலைக்கு போகும்போது இழப்பீடாக ரூ. 30 லட்சம் கேட்பது அதிகப்படியானது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரருக்கும் எனது கணவருக்கும் ஓட்டுநர் உரிமம் இல்லாததாலும் எனது கணவர் சென்ற வாகனத்திற்கு காப்பீடு சான்று இல்லாததாலும் 3ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,

சாட்சியின் கையொப்பம் மேட்டுப்பாளையம்.